DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 364 /2024** | | |
| Deposition of Witness for | PW 1<br>Prosecution<br>Court | | |
| Name | திருமதி.சுபாஷினி | Native | |
| Father/Husband Name | : க.பெ சிவாஜி | Calling | : மருந்து ஆளுநர் |
| Taluk | : ராசிபுரம் | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14.10.2025.

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 4.25

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மருந்தாளுநராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த சிவாஜி எனது கணவர் ஆவார். விபத்தில் இறந்த மற்றொரு நபர் பார்த்திபன் டிரைவர் ஆவார்.

2. கடந்த 13.7.2024 அன்று எனது கணவர் ஒரு ஆம்னி காரை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தொழில் விசயமாக காரைக்குடிக்குச் சென்றார். அந்த வாகனத்தை பார்த்திபன் தான் ஒட்டிச் சென்றார்.அன்றே காலை 07.00 மணியளவில், நான் வீட்டில் இருநத்போது, ஒரு நபர் போன் செய்து, ஆத்துாருக்கு அருகே உள்ள ஒரு இடத்தில் எனது கணவர் சென்ற ஆம்னிகாரின் மீது ஈச்சர் வாகனம் மோதி, சம்பவயிடத்திலேயே

இறந்துவிட்டதாக கூறினார்.

3) பின்னர் நான் சம்பவயிடத்திற்கு வரும்வழியிலேயே மீண்டும் ஒரு நபர் போன் செய்து, எனது கணவரின் பிரேதத்தை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆத்துார், அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்வதாக கூறினார். எங்களது காரின் ஓட்டுநர் பார்த்திபனுக்கு பலத்த அடிப்பட்டு, உயிருக்கு போராடி கொண்டிருப்பதாகவும், அவரையும் ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக கூறினார்.

4) அதன்பிறகு, நான் ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு சென்று, எனது கணவரை ஆம்புலன்ஸில் வைத்திருந்தார்கள், நான் அவரை பார்த்தேன், அவருக்கு நெற்றியிலும், மண்டை, தாடை ஆகிய இடங்களில் பலத்த அடிப்பட்டு மற்றும் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு இறந்த நிலையில் இருந்தார்.

5) விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநர் ஆம்னி கார் வந்த பாதையிலேயே எதிராக வந்து, விபத்தை ஏற்படுத்தியதாக கூறினார்கள். ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநரின் பெயர் ராஜமாணிக்கம் என்று தெரிந்து கொண்டேன். ஈச்சர் வாகனத்தின் பதிவெண் சரியாக நினைவில்லை, 7552 ஆகும்.

6) அதற்கு பின்னிட்டு, எனது உறவினர்கள் மூலம் போலிஸ் ஸ்டேஷசனுக்கு சென்று, எனது கணவர் வந்த காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்திய ஓட்டுநரின் மீது நடவடிக்கை எடுக்ககோரி புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்துதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் மனு அ.த.சா.ஆ- 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதன்பிறகு, எனது கணவரின் பிரேத்தின் மீது விசாரணை

செய்து, எங்களிடம் ஒப்படைத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது கணவர் The great thilrupa என்ற நடன நிகழ்ச்சி நடத்திவந்தார் என்றால் சரிதான். எனது கணவர் சென்ற காரை வாடகைக்கு பேசிதான், எடுத்து சென்றார் என்றால் சரிதான். இந்தவிபத்திற்கான காரணமான ஆம்னிகார் TN 54 A 9252 என்ற பதிவெண் கொண்ட வாகனம் என்றால் சரிதான். அந்த ஆம்னி காரை ஓட்டி வந்த நபர் பார்த்திபன் என்று சொன்னால் சரிதான். விபத்திற்குள்ளான ஆம்னி கார் வாடகைக்கு விடப்படும் கார் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) விபத்திற்குள்ளான ஆம்னி காரை ஓட்டிய பார்த்திபன் is not professional driver என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் நடன நிகழ்ச்சி காரணமாகதான் காரைக்குடிக்கு சென்றார் என்றாலும், அந்த நடன நிகழ்ச்சியை பார்த்திபன் இரவு முழுவதும் கண்விழித்து பார்த்துவிட்டு, காலையில் கார் ஓட்டும்போது, துாக்க கலக்கத்தில் இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

3) இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் வந்த ஆம்னிகார் தெற்கு திசையிலிருந்து வடக்கு திசை நோக்கி வந்து, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த ஈச்சர் வண்டியின் மீது மோதி விபத்து ஏற்படுத்திக்கொண்டது என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது, ஆனால் ஈச்சர் வண்டி தான் எனதுகணவர் வந்த கார் சென்ற பாதையில் வந்து மோதிவிட்டதாக

சொன்னார்கள்.

4) எனது பையன் யஷ்வந்த் என்பவர் ராஜஸ்தான் மாநிலத்தில் பெட்ரோல் கெமிக்கல் இன்ஜினியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். ராஜஸ்தானிலிருந்து எனது மகன் எனது கணவரின் இறந்த செய்தியை கேட்டு, எப்பொழுது வந்தார் என்றால் விபத்தின் போது எனது மகன் வீட்டில்தான் இருந்தார்.

5) எனது கணவர் வந்த ஆம்னி காரை ஓட்டி சென்ற ஓட்டுநர் இடதுபக்கம் செல்லாமல், வலது பக்கமாக ஏறிவந்து, எதிரே வந்த ஈச்சர் வாகனத்தின் மீது மோதி, விபத்து ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல.

6) இந்த விபத்தில் ஆம்னி காரின் ஓட்டுநர் பார்த்திபனும் இறந்துவிட்டதால்தான் எதிரி ராஜமாணிக்கத்தின் மீது நஷ்டஈடு பெறவேண்டி, பொய்யான புகார் ஒன்றினை கொடுக்கப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், பார்த்திபன் கவனக்குறைவாக வந்து இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**முடிவு நேரம்** 04.39

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA
Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.10.14 15:20:43 +0530
Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 364 /2024** | | |
| Deposition of Witness for | PW 2<br>Prosecution<br>Court | | |
| Name | திருமதி. கலைச்செல்வி | Native | வால்கரடு |
| Father/Husband Name | : க.பெ.பழனி | Calling | : கார் பட்டறை |
| Taluk | : ஆத்துார் | Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14.10.2025.

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 04.42

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து, விவசாய வேலை செய்தும், கார் பட்டறை வைத்து, தொழில் செய்து வரும் எனது கணவருக்குஉதவியாக இருந்து வருகிறேன்.

2) தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 1 வருடத்திற்கு முன்னால் ஒருநாள் காலை 06.00-07.00 மணியளவில் நான் மாடு கட்ட போனேன். அப்பொழுது டமார் என்று சத்தம் கேட்டது. அதற்குபின்னிட்டு, நான் மாட்டை கட்டிவிட்டு, வருவதற்குள் அந்தயிடத்தில் கும்பல் கூடிவிட்டது. நான் துாரமாக நின்றுபார்த்தேன். அப்பொழுது, அங்கிருந்தவர்கள்

ஒரு ஆம்னிகாரும், ஈச்சர் வண்டியும் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். அந்த விபத்தில் ஒருவர் இறந்துவிட்டார். மற்றொரு அடிப்பட்ட நபரை , மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள்.

3) விபத்தில் இறந்த நபர் மற்றும் காயமுற்ற நபரின் விவரம் எதுவும் தெரியாது. அந்த காரின் பதிவெண் எதுவும் தெரியாது. ஈச்சர் வாகனத்தின் பதிவெண்ணும், அதன் ஓட்டுநரின் விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி, குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்திருப்பதால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யவேண்டி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ஆத்துார் - வீரகனுார் செல்லும் ரோட்டின் ஓரமாகதான் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகில்தான் அம்மன் அருள் ஆட்டோ கேரேஜ் என்ற பெயரில் பட்டறை வைத்து, மெக்கானிக் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்சொன்ன பட்டறையை எனது கணவர்தான் பார்த்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி ஒரு பையன் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

2) கடந்த 13.07.2024 அன்று காலை 06.15 மணியளவில், அம்மன் அருள் கேரேஜ் என்ற எங்களது பட்டறையை நானும்,எனது கணவரும் சுத்தம் செய்துக்கொண்டிருந்ததாக போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை, காலை 10.00 மணிக்குதான் கடையை

சுத்தம் செய்ததாக சொன்னேன்.

3) நான் கடைக்கு முன்பாக இருந்தபோது, தெற்கு திசையிலிருந்து வடக்கு திசையை நோக்கி TN 54 A 9262 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி கார் அதன் திசையில் வந்துக்ெொகண்டிருந்தபோது, வடக்கிலிருந்து தெற்கு திசை நோக்கி எதிரே வந்த TN 28 AM 7552 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து, ஆம்னிகாரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, ஆம்னிகாரின் இருந்த இரண்டு நபர்களுக்கும் பலத்த அடிப்பட்டு, ஒரு நபர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாகவும், மற்றொரு நபர் முடியாத நிலையில் இருந்ததாகவும், அதனை நான் நேரில் பார்த்ததாகவும், போலிசாரிடம் சொன்னேனா என்றால் நான் பார்த்ததாக சொல்லவில்லை, விபத்து நடந்ததை பற்றிதான் சொன்னேன்.

4) மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், ஈச்சர் வாகனத்தை ஓட்டிவந்த நபர் விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரியை காப்பாற்ற முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** இல்லை

முடிவு நேரம் 04.55.

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA Digitally signed by ANIS FATHIMA Date: 2025.10.14 15:20:54 +0530

Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 364 /2024** | | |
| Deposition of Witness for | PW 3<br>Prosecution<br>Court | | |
| Name | திரு. மணிமாறன் | Native | ஆத்துார் |
| Father/Husband Name | : த.பெ.அய்யாசாமி | Calling | : ரியல் எஸ்டேட் |
| Taluk | : ஆத்துார் | Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14.10.2025.

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 04.56

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து, ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன்.

2) கடந்த 13.07.2024 அன்று காலையில் சுமார் 09.30 மணியளவில் தொழில் சம்பந்தமாக வால்கரடை தாண்டி, நானும்,எனது நண்பரும் இருசக்கரவாகனத்தில் சென்றோம். அப்பொழுது, அந்த வழியில் கூட்டமாக இருந்தது. விசாரித்தோம். அப்பொழுது அங்கு விபத்து நடந்ததாகவும், அது குறித்து, போலிசார் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரியவந்தது.

3) அப்பொழுது, போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு, வரைபடம் ஒன்று வரைந்து, அதில் எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் எதற்கு என்று கேட்டோம். விபத்து சம்பந்தமாக வரைபடம் வரைந்துள்ளோம் என்றும், அதற்கு சாட்சியாக இருக்கும்படியும், நீதிமன்றத்தில் வந்து சாட்சியாக இருக்கும்படியும் கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம்காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ- 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் dance master ஆக எத்தனை வருடங்களாக வேலை செய்து வருகிறேன் என்றால் தற்பொழுது இல்லை, ஆனால் கடந்த 30 வருடங்களாக dance master ஆக இருந்துவந்தேன்.

2) விபத்தில் இறந்துபோன சிவாஜி dance master என்றாலும், அவரை எனக்கு 30 வருடங்களாக தெரியும் என்றாலும் சரிதான். சிவாஜியை எனக்கு கடந்த 30 வருடங்களாக தெரியும்பட்சத்தில், அதனை எனது போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். சிவாஜிக்கு ஏற்பட்ட விபத்து குறித்து, அவரின் வீட்டிற்கு நான்தான் தகவல் கொடுத்தேனா என்றால் நான் தகவல் கொடுக்கவில்லை.

3) போலிசார் வரைபடம் வரைந்து, அதில் நான் கையெழுத்து செய்ததாக

சொல்லும்பட்சத்தில், நான் வெறும் பேப்பரில் காவல் நிலையத்தில்வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல, சம்பவயிடத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன்.

4) பார்வை மகஜர் யார் எழுதினார்கள் என்றால் காவல் ஆய்வாளர்தான் எழுதினார், அதில் நான் கையெழுத்து செய்தேன். நான் வெள்ளை பேப்பரில்தான் கையெழுத்து செய்தேன் என்றாலும், நான் கையெழுத்து செய்தபிறகுதான் போலிசார் எழுதினார்கள் என்றாலும் சரியல்ல, எழுதிய பேப்பரில்தான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (அ.த.சா.ஆ- 2) போலிசார் எழுதிய மகஜரில் 2 இன்ச் கீழே தான் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல, 1 இன்ச்தான் தள்ளிதான் கையெழுத்து செய்தேன். நான் மட்டும்தான் பார்வை மகஜரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல, முகமது என்ற நபரும் கையெழுத்து செய்தார், அவர் என்னுடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் நபர் ஆவார்.

5) நான் சொல்லுவது பொய் என்றாலும், என்னுடன் கையெழுத்து செய்த முகமது என்பவர் மஞ்சினியில் மீன் கடை வைத்து, தொழில் செய்து வருவதாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறார் என்றால் முகமது மாலை 06.00 மணிக்கு மேல் மீன் கடை வைத்து நடத்துவார், நானும் மாலை 06.00 மணிக்கு மேல் நடன நிகழ்ச்சி நடத்துவேன், பகலில் நாங்கள் இருவரும் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்வோம்.

6) விபத்தில் இறந்த சிவாஜி என்ற நபர் கடந்த 30 வருடங்களாக எனக்கு பழக்கம் என்பதாலும், காவல் நிலையத்தில் வைத்து வெறும் பேப்பரில் கையெழுத்து

செய்துவிட்டு, சம்பவயிடத்தில் கையெழுத்து போட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**முடிவு நேரம்** 05.13

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.10.14 15:21:06 +0530

Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 364 /2024** | | |
| Deposition of Witness for | PW 4<br>Prosecution<br>Court | | |
| Name | திரு. யஷ்வந்த் | Native | மங்களபுரம் |
| Father/Husband Name | : த.பெ.சிவாஜி | Calling | : இன்ஜினியர் |
| Taluk | : ராசிபுரம் | Age | : 26 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14.10.2025.

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 05.22

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து, ராஜஸ்தானில் இன்ஜினியராக பணி புரிந்து வருகிறேன். விபத்தில இறந்த சிவாஜி எனது அப்பா ஆவார். விபத்தில் இறந்த மற்றொரு நபர் பார்த்திபன் எனது அப்பாவிற்கு தெரிந்த நபர். சாட்சி சுபாஷினி எனது தாயார் ஆவார்.

2) கடந்த 13.07.2024 அன்று காலை 06.00 -07.00 மணியளவில் நானும், எனது அம்மாவும் வீட்டில் இருந்தோம். அப்பொழுது எனது அம்மாவிற்கு ஒரு போன் வந்தது. அந்த போனில் எனது அப்பா வந்த TN 54 A 9262 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி காரின் மீது TN 28 AM 7552 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் வாகனம் மோதி, விபத்து

ஏற்பட்டு, எனது அப்பா சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் எந்தயிடம் என்று கேட்டதற்கு, மஞ்சினிக்கு அருகில் விபத்து நடந்ததாக சொன்னார்.

3) ஆம்னி காரை ஓட்டிவந்த பார்த்திபன் என்பவர் விபத்தில் அடிப்பட்டு, கொஞ்ச நேரம் உயிருடன் இருந்ததாக சொன்னார்கள். நாங்கள் முதலில் காவல் நிலையத்திற்கு வந்துட்டோம். எனது அப்பாவின் உடல் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டது. நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு, ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று, எனது அப்பாவை பார்த்தேன். எனது அப்பாவிற்கு தலையில் பலத்த அடிப்பட்டதால் இறந்துவிட்டதாக கூறினார்கள். விபத்தில் அடிப்பட்ட மற்றொரு நபர் பார்த்திபனை ஆத்தூர், அ ரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள்.

4) அதன்பின்னர், மேல்சிகிச்சைக்காக சேலம், அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சேலம், அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே பார்த்திபன் இறந்துவிட்டார். இந்த விபத்து ஈச்சர் வண்டி ஆத்தூரிலிருந்து வீரகனூர் செல்லும் சாலையில் இடது புறம் ஒரம் செல்லாமல் வலது புறமாக ஏறி, வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, ஆம்னி காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக கூறினார்கள்.

5) பின்பு, எனது அப்பாவின் பிரேதத்தின் முன்பு விசாரணை செய்து, எனது அப்பாவின் பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்தில் இறந்த எனது அப்பா சிவாஜியிடம் விபத்து நடந்ததாக சொல்லும் தினத்திற்கு முன்பு போனில் பேசினேன் என்றால் சரிதான். நான் எனது அப்பாவிடம் போன் பேசியதாக சொல்லும்பட்சத்தில், எங்கிருந்து பேசினேன் என்றால் மங்களபுரத்திலிருந்துதான் பேசினேன்.

2) நான் பெட்ரோல் கெமிக்கல் கம்பெனியில் இன்ஜினியராக வேலை செய்து வரும் பட்சத்தில், எனக்கு ராஜஸ்தானில்தான் வேலை என்றாலும், ஐடி கம்பெனியில் வேலை செய்ததால்தான் வீட்டிலிருந்து வேலை செய்யமுடியும் என்றாலும் சரியல்ல, எனது கம்பெனியில் 30 நாட்கள் வேலை செய்தால் 30 நாட்கள் விடுமுறை என்ற விதிமுறை உள்ளது. நான் விடுமுறை நாளில் வீட்டில் இருந்தபோதுதான் எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

3) எனது அப்பாவிற்கு ஏற்பட்ட விபத்து குறித்து ஒரு நபர் தகவல் சொன்னதாக சொல்லும்பட்சத்தில், அந்த நபரின் பெயர், விலாசம், முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4) இந்த விபத்திற்கு காரணம் ஆம்னி காரை ஓட்டிய பார்த்திபனின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும்தான் காரணம் என்றாலும், பார்த்திபன் சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளிற்கு முன்தினம் இரவு முழுவதும் நடன நிகழ்ச்சியை துாங்காமல் பார்த்தாலும், ஓய்வு எடுக்காமல் வாகனத்தை ஓட்டி வந்ததாலும், சாலையின் இடதுபக்கம் ஒட்டி வர வேண்டிய ஆம்னி காரை சாலையின் வலதுபக்கம் ஏறிவந்து ஈச்சர் வானத்தின்

மீது மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றாலும் சரியல்ல.

5) இந்த விபத்தில் எனது அப்பாவும், ஆம்னிகாரின் ஓட்டுநரான பார்த்திபனும் இறந்துவிட்டதால், நஷ்டஈடு பெறவேண்டி, எதிரியின் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும், இந்த விபத்திற்கு முழு காரணமும் ஆம்னிகாரின் ஓட்டுநர் பார்த்திபன்தான் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்ததமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**முடிவு நேரம்** 05.42

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA
Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.10.14 15:24:10 +0530

Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 364 /2024** | | |
| Deposition of Witness for | PW 5<br>Prosecution<br>Court | | |
| Name | திருமதி. ரேவதி | Native | ஈஸ்வரமூர்த்திபாளையம் |
| Father/Husband Name | : க.பெ. பார்த்திபன் | Calling | : கூலி |
| Taluk | : ராசிபுரம் | Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14.10.2025.

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 05.44

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த பார்த்திபன் எனது கணவர் ஆவார். விபத்தில் இறந்த மற்றொரு நபர் சிவாஜி எனது கணவருக்கு தெரிந்த நபர்.

2) கடந்த 13.07.2024 அன்று வீட்டில் இருந்து, தெரிந்த நபருடன் வெளியில் சென்று வருகிறேன் என்று சொல்லிவிட்டு, மங்களபுரம் செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். அதன்பிறகு, இரவு 10 மணி ஆகியும் எனது கணவர் வீட்டிற்கு வராததால், நான் 2, 3 முறை போன் செய்து விசாரித்தேன். அவர் நான் ஒரு விசேஷத்திற்கு செல்வதாகவும், காலையில்தான் வருவதாகவும் சொன்னார்.

3) அதன்பிறகு, மறுநாள் காலை 07.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது, எனது கணவருடன் வேலை செய்யும் ஒரு நபர் எனக்கு போன் செய்து, எனது கணவர் வந்த வாகனத்தின் மீது ஈச்சர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், எனது கணவர் சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாகவும் கூறினார்.

4) அதன்பிறகு, எனது கணவரை சேலம், அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்து செல்வதாக கூறினார்கள்.நான் வாழப்பாடியில் வந்து, எனது கணவர் வந்த ஆம்புலன்ஸில் ஏறிக்கொண்டு, சேலத்திற்கு சென்றேன். எனது கணவரை பார்த்தேன், எனது கணவருக்கு கை, கால் மற்றும் தலை ஆகிய இடங்களில் அடிப்பட்டு, கட்டு போடபட்டிருந்தது. எனது கணவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது கணவரை பரிசோதித்த மருத்துவர் எனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னார். எனது கணவருடன் வந்த சிவாஜி என்பவரும் இறந்துவிட்டதாக கூறினார்கள்.

5) விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வண்டியின் ஓட்டுநரை பற்றியோ, பதிவெண் பற்றியோ, யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்பது பற்றி விசாரித்தபோது, ஈச்சர் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக சொன்னார்கள்.சேலம், அரசு மருத்துவமனையில் எனது கணவரின் பிரேதத்தின் முன்பு பிரேத விசாரணை செய்தார்கள். வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்னுடைய கணவரின் பெயரில்தான் ஆம்னிகார் உள்ளது என்றால்

சரிதான்.அந்த ஆமனிகார் சொந்த உபயோகத்திற்குதான பயன்படுத்த முடியும் என்றாலும், வாடகைக்கு பயன்படுத்தும் கார் அல்ல என்றாலும் சரிதான். எனது கணவர் மங்களபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸில் உதவியாளராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான்.

2) எனது கணவர் is not professional driver அல்ல என்றால் சரிதான். எனது கணவர் நடனநிகழ்ச்சிக்கு சிவாஜியுடன் சென்றுவிட்டு, வரும்வழியில்தான் விபத்து ஏற்பட்டதுஎன்றால் அவர் எங்கு சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. தொழில்முறை டிரைவராக இருந்தால் மட்டும் தான் இரவு முழுவதும் விழித்திருந்தாலும், பகலிலும் வாகனத்தை ஓட்ட முடியும் என்றாலும், எனது கணவர் இரவு முழுவதும் நடன நிகழ்ச்சியை பார்த்துவிட்டு, பகலில் காரை ஓட்டும்போது, தூக்கத்தில் அஜாக்கிரதையாக ஓட்டி வந்தார் என்றாலும், எனது கணவர் சாலையின் இடதுபுறமாக ஓட்டாமல், வலது புறமாக ஏறி ஓட்டி வந்து, ஈச்சர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றாலும், விபத்திற்கு எனது கணவரின் கவனக்குறைவுதான் காரணம் என்றாலும், விபத்தில் நஷ்டஈடு பெறவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கு இந்த விபத்திற்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை . **முடிவு நேரம்** 06.01

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA
Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.10.14 15:24:23 +0530

Judicial Magistrate No.1,
Attur.